DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 1044/2025

Prosecution PW 3

Deposition of Witness for Defence

Court

Name : நிரஞ்சன்

Father's Name : திருவேங்கடசாமி

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 16.02.2026.

**1 முதல் 3 எதிரிகள் நீதிமன்ற காவலிலிருந்து காணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டனர்.**

**முதல் விசாரணை**

எனக்கு சொந்த ஊர் கோயம்புத்தூர் ஆகும். நான் தற்போது கரூர் அரசு மருத்துவக் கல்லூரி விடுதியில் தங்கி 4ம் ஆண்டு மருத்துவ படிப்பு படித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ எனக்கு தெரியும். என்னுடன் படித்து

வருகின்றனர். கடந்த 20.09.2025ம் தேதி இரவு சுமார் 07.40 மணியளவில் 3 நபர்கள் எங்களிடம் செயின், நகைகளை பறித்துவிட்டதாக சொன்ன தகவலைக் கேள்விபட்டு பஞ்சமாதேவி ரோடு, சந்தனகாளிப்பாளையத்திலிருந்து சங்கராம்பாளையம் செல்லும் சம்பவ இடத்திற்கு சென்றேன். அ.சா.1, அ.சா.2 க்கு கார் ஓட்ட கற்றுக்கொடுக்க சென்றதாகவும், 3 நபர்கள் வழிமறித்து சுவாஷனாவின் நகைகளை பறித்து கொண்டதாகவும், மிரட்டிவிட்டு சென்றதாகவும் கூறினார்கள். சம்பவ இடத்திற்கு நானும், சீனிவாசன், செங்கோட்டையன் ஆகியோர்கள் சென்றிருந்தோம். பின்னர், இரவு 08.30 மணியளவில் மகளிர் விடுதியில் 08.30 மணிக்கு இன்டைம் என்பதால் அவர்களை அழைத்துக் கொண்டு ஹாஸ்டல் வந்துவிட்டோம். மறு நாள் காலை வெங்கமேடு காவல்நிலையம் சென்று சம்பவம் குறித்து அ.சா.1 புகார் கொடுத்தார். அவருடன் சென்றோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை ( 1 முதல் 3 எதிரிகள் தரப்பில்)**

அ.சா.1 மற்றும் அ.சா.2 எனது நண்பர்கள் என்றால் சரிதான். அ.சா.1 தகவல் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சுமார் இரவு 07.40 மணிக்கு தகவல் சொன்னார். சம்பவத்தை பற்றி கேள்விபட்ட உடனே மருத்துவமனையிலுள்ள புறக் காவல் நிலையத்தில் நாங்கள் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தகவல் கேள்விபட்ட உடனே 10, 15 நிமிடத்தில் சம்பவ இடம் சென்றுவிட்டோம் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு செல்லும் வழியில் பசுபதிபாளையம் காவல் நிலையத்தில் எந்த ஒரு புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி எங்களுடைய ஹாஸ்டல் வார்டன் மற்றும் வேறு யாரிடமும் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா.1, அ.சா.2 எனது நண்பர்கள் என்பதால் அவர்கள் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எங்களது விடுதியிலிருந்து வெளியே செல்வதற்கும், திரும்பி உள்ளே வருவதற்கும் out

register உள்ளது என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லும் தேதியில் out register ல் பதிவு செய்துள்ளோமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அவ்வாறு ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், அவ்வாறு நடந்திருந்தால் out register ல் பதிவு செய்திருப்போம் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்./–எஸ்.பி.பரத் குமார்
நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்